மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்பொழுது நில ஆர்ஜிதம் செய்யும் கட்டத்தில்தான் இருக்கிறோம்.

சுற்றுலாப் பயணிகள் வரும் வண்டிகளுக்கு கட்டணம் வசூலிக்கும் திட்டம்.

* வினா எண் 922—திரு. கெ. சொக்கலிங்கம், திரு. இரா. தாமரைக்கனி, திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளி மாநிலங்களில் இருந்து நமது மாநிலத்துக்கு வரும் சுற்றுலா பயணிகள் வண்டிக்கு கட்டணம் வசூலிக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில் அதற்கான கட்டணம் எவ்வளவு?

(இ) எந்த அடிப்படையில் வசூலிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ), (ஆ) மற்றும் (இ) சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் பிரிவு 63 (6)-ன் கீழ் பிற மாநிலங்களிலிருந்து உரிமம் பெற்றுவரும் பேருந்துகளுக்கு அரசு வரி விலக்கு அளித்து ஆணை வழங்கியுள்ளது.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே இந்தக் கூடுதல் வரி விதிப்பின் காரணத்தினால் வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா? திருப்பதி போன்ற வெளிமாநிலங்களிலிருந்து, திருத்தணி, மகாபலிபுரம் போன்ற இடங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இதன் காரணமாக வெகுவாகக் குறைந்திருக்கிறார்கள். அதை நீக்க அரசு முன்வருமா? அதே நேரத்தில், இந்த வரி விதிப்பு சம்பந்தமாக, கேரள போக்குவரத்துத் துறை அமைச்சரும், ஆந்திர போக்குவரத்துத் துறை அமைச்சரும், தமிழக போக்குவரத்து அமைச்சரிடம், இந்த வரி விதிப்பைப் பற்றி ஏதாவது பேச்சு வார்த்தைகள் நடத்தினார்களா? அப்படி நடத்தியிருந்தால் அதன் முடிவு என்ன? அதைப் போக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் துணைக் கேள்வியைச் சுருக்கமாகக் கேட்க வேண்டும்.

மாண்புமிகு திரு. சு. முத்துச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லும்போதே சொன்னேன் அந்த வரி விதிப்பு ரத்து செய்தாகிவிட்டது என்று சொன்னேன். இரண்டாவதாக, உறுப்பினர் குறிப்

பிட்ட மாநிலங்களின் போக்குவரத்து அமைச்சர்கள், என்னிடம் பேசினார்கள், அதன் காரணமாகத்தான் வரி விதிப்பு ரத்து செய்யப் பெற்றிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ரத்து செய்து விட்டதாகச் சொன்னார்கள். நன்றி, ஆனால் அப்படி ரத்து செய்யப்பட்டது எந்தத் தேதியிலிருந்து அமுலுக்கு வருகிறது என்று சொல்வாரா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 18—5—1979 ஆம் தேதியன்று உதகையிலே நடந்த அந்தக் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டு, 26—3—1980 அன்று அதற்கான ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது. இப்பொழுது அந்த வரிவிலக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. அது நடைமுறையில் இருந்துகொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலிருந்து வெளி மாநிலங்களுக்குச் சுற்றுலா பஸ்களில் பயணிகள் செல்லும் போது, கர்நாடகத்தில் ஒரு சீட்டுக்கு 260 ரூபாயும், ஆந்திராவில் ஒரு சீட்டுக்கு 300 ரூபாயும், கேரளத்தில் ஒரு சீட்டுக்கு 160 ரூபாயும் வசூல் செய்கிறார்கள். மொத்தம் 55 சீட்டுகள் இருக்கின்றன. இதனால் அந்த மாநில அரசுகளுக்கு நல்ல வருமானம் வருகிறது. ஆகவே, மீண்டும் அரசு இதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமா? இந்த வரிவசூல்கூட 3 மாதங்களுக்கு ஒரு முறைதான் செய்யப் பெறுகிறது. ஆகவே, அரசு இதை மீண்டும் பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட வரிவிலக்கு கொடுத்திருக்கிற காரணத்தால் ஒரு ஆண்டிற்கு 15 லட்சம் ரூபாய் வருமானம் நமக்குக் குறைகிறது என்று சொன்னாலும், இங்கே வருகிற சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் முகமாகத்தான் அரசு இதைச் செய்திருக்கிறது. மற்ற மாநில அரசுகள் கூட இங்கே இருந்து போகிற பேருந்துகளுக்கு வரி விலக்குக் கொடுப்பதாக ஒப்புதல் அளித்திருக்கிறார்கள், அப்படி ஒரு முடிவு, நடந்து முடிந்த கூட்டத்தில் எடுக்கப்பட்டு, அதை இங்கே நாம் அமுல் செய்திருக்கிறோம். மற்ற மாநிலங்களும் அதைக் கொடுப்பதற்கும், அமுல் செய்வதற்கும் தயாராக இருக்கிறார்கள் என்று கடிதங்கள் வந்திருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆல் இந்தியா பெர்மிட் பெற்று சுற்றுலாப் பயணிகள் வெளி மாநிலங்களுக்குச் சென்றால் 140 ரூபாய் கட்டி விடுகிறார்கள். அப்படிக் கட்டுவது ஒன்றே போதும்,

தனியாக மாநில அரசுகள் வசூலிக்கத் தேவையில்லை என்ற வகையில் ஒரு ஏற்பாட்டை மொத்தமாக தமிழக அரசு மத்திய சர்க்காரிடம் கேட்டு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆல் இந்தியா பெர்மிட் முறையில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. அதில் எப்போதுமே 140 ரூபாயை அந்தந்த மாநிலங்களிலேயே, ஆல் இந்தியா பெர்மிட் வழங்கி, வசூல் செய்து விடுவார்கள். அதில் மற்ற யாரும் வரி வசூல் செய்வது என்கிற பிரச்சினையே இல்லை. ஆனால், நாம் இப்போது பேசிக் கொண்டிருப்பது ஆம்னி பஸ்களைப் பற்றியும், மற்றும் ஸ்பேர் பஸ்களைப் பற்றியும்தான்.

சென்னையிலிருந்து டெல்லிக்கு மேலும் ஒரு ரயில் விடும் திட்டம்.

*வினா எண் 923—திரு. என். பழனிவேல்—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து டெல்லிக்கு மேலும் ஒரு ரயில் சர்வீஸ் துவங்குமாறு மைய அரசிடம் நமது மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலங்களிலே, சென்னையிலிருந்து டெல்லிக்கு மக்கள் அதிகமான அளவில் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் போவதினால், ஒரு வாரம், இரண்டு வாரம் முன்னதாகக் கூட டிக்கெட் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தக் குறையை தவிர்க்கவும், டெல்லி-சென்னை போக்குவரத்துகளை இன்னும் அதிகப்படுத்தக் கூடிய முறையிலேயும்—இப்போது தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் டெல்லி செல்வதுபோல—மேலும் ஒரு ரயில் வண்டியை விடுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இதுபற்றி தென் மண்டல ரெயில்வே பொது மேலாளர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எழுதிக் கேட்டு, அப்படி எழுதிக் கேட்டதற்கு சென்னையிலிருந்து டெல்லிக்கு நான்கு